# அம்மா அம்மா அன்பின் வடிவம் நீதானம்மா

அம்மா அம்மா அன்பின் வடிவம் நீதானம்மா
அருளைப் பொழிவதும் நீதானம்மா
ஆறுதல் அளிப்பதும் நீதானம்மா -( 2 )
அம்மா அம்மா அன்பின் வடிவம் நீதானம்மா

**1)**
மணிமுடி அணிந்த மாதவளே - இந்த
மானிலம் காத்திடும் தூயவளே
உண்மையை ஊட்டிடும் பேரழகே
உள்ளத்தில் நிறைந்திடும் நறுமலரே

( அம்மா )

**2)**
துன்பங்கள் தோன்றிடும் வேளையிலே - நீ
துணைநின்று காத்திட வேண்டுமம்மா
அன்பினில் என்றும் அரவணைத்து-எம்மை
அருளினில் வளர்த்திட வேண்டுமம்மா

( அம்மா )